# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 121 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | பெப்ரவரி 10, 2021

தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news


## வடக்கில் 21 பேருக்கு கோரோனா!

### இருவர் யாழ். பல்கலை மாணவர்கள் ஐவர் வங்கி ஊழியர்கள்



வடக்கு மாகாணத்தில் மேலும் 21 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று (10) புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 2 பேர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீட ஆய்வு கூடம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் இன்று 776 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப் பட்டன. அவர்களில் 21 பேருக்கு கோரோனா தொற்று

03



## மக்கள் எழுச்சியே பேரணி!

சில்லறை தனமா செயற்பாடு காளல் மக்களை சிலர் குழப்ப முற்படுகின்றர். மக்களது ஒற்றுமையினை வலுப்படுத்த அனைவரும் முன்வர வேண்டுமென அழைப்பினை விடுத்துள்ளார் வணபிதா லியோ அடிகளார்.

அதேவேளை மக்களுக்காக மக்களால் நடத்தப்பட்ட போராட்டம்.

03

## குருந்தூர் மலையில் மீட்கப்பட்டது பல்லவர் கால தாரா லிங்கமே

### உண்மைகள் ஒருகாலமும் உறங்குவதில்லை என்கிறார் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள்

குருந்தூரில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கமானது பல்லவர்காலத்திற்குரியது. அது தாரா லிங்கம் என அழைக்கப்படுகிறது. இவ்வாறு சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது

மிக அண்மைய காலங்களில் தொல்பொருள் திணைக்களமானது பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த எமது இந்து சைவப்பாரம்பரியங்கள் மிக்க இடங்களை பௌத்தத்திற்குரியயவையாக சொந்தம் கொண்டாடி வருகின்றன.

அந்தவகையில் மிக அண்மையில் கையகப்படுத்தப்பட்ட இடமே குருந்தூர் மலைப்பகுதி.

03



கூந்துார் முருகன் கும்பகோணம்



குருந்தூர் முல்லைத்தீவு







## முல்லைத்தீவு குருந்தூர் மலை ஆய்வில் சிவலிங்கத்தை ஒத்த கல் மீட்பு!

### தாரா லிங்கம் என தகவல்

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்படும் அகழ்வின் போது அநுராபுர காலத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது நூற்றாண்டுகளுக்குட்பட்ட தொல்பொருள் சிதைவுகளும் சிவலிங்கத்தை ஒத்த கல் ஒன்றும் கண்டெடுக்கப்பபட்டுள்ளது.

03






தரணி எங்கும் தமிழராய் இணைவோம்






# பேரணி குறித்து கொழும்பு ஊடகங்கள் கவனம் செலுத்தாமை ஏன்?

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி குறித்து கொழும்பை தளமாகக் கொண்ட ஊடகங்கள் கவனம் செலுத்தாமை ஏன் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் குறித்து தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், “அமைதிவழிப் போராட்டம் என்பது அடிப்படை ஜனநாயக உரிமைகளில் ஒன்றாகும். இவ்வாறான அமைதிவழிப் போராட்டங்களுக்கு செவிசாய்க்க வேண்டும். அவர்களின் கவலைகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி குறித்து தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமையை அவதானித்தேன். ஆனால் கொழும்பைத் தளமாகக் கொண்ட ஊடகங்கள் இது குறித்து ஏன் கவனம் செலுத்தவில்லை?” என பதிவிட்டுள்ளார்.

# தமிழ் அரசியல் கைதிகள் என்று சிறையில் எவரும் இல்லை



நாட்டில் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இன்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

குறித்த கேள்விக்கு பதிலளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சிறைகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என திட்டவட்டமாக தெரிவித்தார்.

இதேவேளை பிரதமரின் சார்பாக கேள்விக்கு பதிலளித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் 12,843 பேர் அரசாங்கத்திடம் சரணடைந்ததாக கூறினார்.

இவ்வாறு சரணடைந்தவர்களும் 600 சிறுவர் போராளிகளும் அரசாங்கத்தினால் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டனர் என அலி சப்ரி தெரிவித்தார்.

பிரதமர் தெரிவித்ததன் அடிப்படையில் இலங்கையில் எந்த அரசியல் கைதிகளும் இல்லை என்றும் தங்களின் வழக்குகள் நிலுவையில் இருப்பதால் ஏராளமானோர் தடுப்பு காவலில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அறிவுறுத்தலின் அடிப்படையில், அவர்களின் வழக்குகளை எவ்வாறு விரைவுபடுத்தலாம் என்பதை அறிய பொது பாதுகாப்பு அமைச்சர், சட்டமா அதிபர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோரை தான் சந்தித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் அவர்களை வேண்டுமென்றே தடுப்புக்காவலில் வைக்கவில்லை என்றும், அவர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளன என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆகவே அவர்களுக்கு எதிரான இந்த குற்றச்சாட்டுகளை தனித்தனியாக விசாரிக்குமாறு சட்டமா அதிபரிடம் வினவப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

# வடக்கு மற்றும் கிழக்கில் 97 வீதமான நிலங்கள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுவிட்டன



30 ஆண்டுகள் இடம்பெற்ற யுத்தத்தை தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கில் 97 வீதமான நிலங்கள் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகள் மற்றும் அரச காணிகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இன்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, 100 இல் 3 வீதமான காணிகள் தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுவதாக தெரிவித்தார்.

இதேவேளை இந்த விடயம் உளவுத்துறை ஆதாரங்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சினால் பெறப்பட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டது என்றும் தேசிய பாதுகாப்பு குறித்து யாரும் கேள்வி கேட்க முடியாது என்றும் அமைச்சர் கூறினார்.

எவ்வாறாயினும், மீதமுள்ள 97 வீதமான நிலங்கள் அந்தந்த உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

# தென் கிழக்கு பல்கலை உபவேந்தராக 11 பேர் விண்ணப்பம்

தென் கிழக்கு பல்கலையின் உப வேந்தர் பதவிக்கு 11 பேர் விண்ணப்பித்துள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த உப வேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களை கடந்த செவ்வாய்க்கிழமை (09) பி.ப 3.00 மணிக்கும் முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய 7 பேராசிரியர்களும் 4 கலாநிதிகளும் என 11 பேர் விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ஆறு வருடங்கள் செயற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில், மீண்டும் உப வேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு மேலதிகமாக தென் கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசாரம் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.எம். ஜுனைதீன், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சுற்றுல்லா பேராசிரியர் எம்.எஸ். எம்.அஸ்லம், தென் கிழக்கு பல்கலைக்கழக கணக்கீட்டு பேராசிரியர் ஏ.எல். அப்துர் ரவூப், அதே பல்கலைக்கழக முகாமைத்துவ பேராசிரியர் பாத்திமா ஹன்ஸியா அப்துல் ரவூப் ஆகியோரும் உப வேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

அத்துடன் தென் கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ பேராசிரியர் எம்.பீ.எம். இஸ்மாயில், அதே பல்கலைக்கழக இயந்திரவியல் பொறியியல் பேராசிரியர் ஏ.எம். முஸாதீக், கொழும்பு பல்கலைக்கழக நிதிப் போராசிரியர் ஏ.ஏ.அஸீஸ், மலேசியா விலுள்ள மலாயா பல்கலைக்கத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இஸ்மத் ரம்ஸி ஆகியோரும் இப்பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாத நடுப் பகுதியில் இடம்பெறும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, தற்போதைய உப வேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜீமின் பதவிக் காலம் எதிர்வரும் ஒகஸ்ட் 7ஆம் திகதி நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தாராலிங்கம்..! - ஒரு பார்வை

சிவலிங்கங்களில் பலவிதங்கள் உள்ளதுபோல், பாணப்பகுதியில் பட்டைகள் அமைந்துள்ள சிவலிங்கங்களையும் சில திருத்தலங்களில் தரிசிக்கலாம். அவை ”தாராலிங்கம்“ என்று கூறப்படுகின்றன.

காஞ்சி கைலாசநாதர் கோவில், மாமல்லபுரத்தில் உள்ள கற்கோவில்கள், தென்னாற்காடு மாவட்டம் பனைமலையில் உள்ள சிவன் கோவில், பொன்பரப்பி சிவன் கோவில், திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் கோவில் போன்ற ஆலயங்களின் வளாகத்திலும் தாராலிங்கங்கள் உள்ளன.

தாராலிங்கங்கள் ஐந்து வகைப்படும் என்று சிற்ப சாஸ்திரம் கூறுகிறது. 4, 8, 16, 32, 64 என்ற விகிதத்தில் பட்டைகள் அதாவது தாரைகள் அமைத்திருப்பார்கள்.

**நான்கு பட்டைகள் கொண்ட வேதலிங்கம்**

நான்கு பட்டைகள் கொண்ட லிங்கங்களை ”வேதலிங்கம்“ என்று போற்றுவர். சக்கரப்பள்ளி என்ற பாடல் பெற்ற திருத்தலத்தில் மூலவர் நான்கு பட்டை லிங்கமாகத் திகழ்கிறார். கோவை காரமடை ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில் நாற்பட்டை லிங்கமாகத் திகழ்கிறார். பொதுவாக, நான்கு பட்டைகள் கொண்ட லிங்கத்தை சர்வதோபத்ரதாரா லிங்கம் என்பர்.

**எண் பட்டைகள் கொண்ட அஷ்டதாரா லிங்கம்**

எண் பட்டைகளைக் கொண்ட அஷ்டதாரா லிங்கம் காஞ்சி கைலாசநாதர் கோவிலிலும், திருவதிகை கோவிலிலும் காணப்படுகிறது. இதன் எட்டுப்



பனைமலை – தாளகிரீசுவரர் திருக்கோயில் பல்லவர்கால தாரா லிங்கம்



காஞ்சி கைலாசநாதர் கோவில் தாரா லிங்கம்

பட்டைகளும் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகியவற்றைக் குறிக்கும் என்பர். மேலும் எட்டு பைரவ சக்திகளையும், இறைவனின் அஷ்ட வீரச்செயல்களையும் குறிப்பன என்பர். சிதம்பரம் நவலிங்க சந்நிதியிலும் எட்டு திசை லிங்கங்கள் உள்ளன. இவை அஷ்டதாரா லிங்கங்களாகும்.

**பதினாறு பட்டைகள் கொண்ட சோடச தாராலிங்கம்**

பதினாறு பட்டைகள் உடைய லிங்கம் சோடச தாராலிங்கம் எனப்படும். இந்த லிங்கத்தை சந்திரகலா லிங்கம் என்றும் சொல்வர். இவ்வகை லிங்கங்கள் குளிர்ச்சியான கல்லில் உருவானவையாகும். பெரும்பாலும் சந்திரக்காந்தக் கல்லில் உருவானதாக இருக்கும். சிதம்பரம் நவலிங்க சந்நிதியின் மையத்திலும், பழையாறை மேற்றளியிலும், பொன்பரப்பி தலத்திலும், திருப்பட்டூர் ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர் கோவில் வளாகத்தில் உள்ள கோவிலிலும் சோடச தாராலிங்கம் உள்ளது.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே சிறுவத்தூர் கிராமத்தில் மிகப் பழமை வாய்ந்த நாகநாத ஈஸ்வரர் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் கருவறையினுள் அமைந்திருக்கும் சிவலிங்கம் 16 பட்டைகளோடு காட்சியளிக்கிறது. இது பல்லவர் காலத்தில் கட்டிய கோயில் ஆகும். கி.பி 7ம் நூற்றாண்டை சேர்ந்த இந்த லிங்கம் தாராலிங்கம் எனப் பெயர் பெற்றதாகும். 3 அடி உயரம் கொண்ட இது மிகப் பருமனாக, கருப்பு நிறம் கொண்ட கருங்கல்லினால் படைக்கப் பட்டிருக்கிறது. இப்பகுதி மன்னர்கள் ஆண்ட காலங்களில் சிறுவக்கூர் என அழைக்கப்பட்டதாக திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயில் கல்வெட்டு நமக்கு உணர்த்துகிறது.

காஞ்சியில் ராஜசிம்ம பல்லவன் கட்டிய கயிலாச நாதர் கோயிலில் சிவலீலைகளைச் சித்திரிக்கும் அற்புதச் சிற்பங்களுடன், பதினாறு பட்டையுடன் கூடிய தாரா லிங்கமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

**முப்பத்திரண்டு பட்டைகள் கொண்ட தர்மதாரா லிங்கம்**

முப்பத்திரண்டு பட்டைகளுடன் காட்சி தரும் லிங்கத்தை தர்மதாரா லிங்கம் என்பர். காஞ்சியம்பதியில் 32 பட்டைகள் கொண்ட லிங்கத்தை தரிசிக்கலாம்.

**அறுபத்துநான்கு பட்டைகள் கொண்ட அபூர்வலிங்கம்**

64 பட்டைகளுடன் திகழும் அபூர்வ லிங்கத் திருவுரு-கலைகள், சிவபெருமானின் 64 லீலா விநோதங்கள், 64 யோகியர்களைக் குறிக்கும் என்பர்.

இவ்வகை லிங்கத்தை காஞ்சியம்பதியில் தரிசிக்கலாம். மேலும், அறுபத்து நான்கு பட்டைகள் கொண்ட லிங்கம் பைரவரையும் குறிப்பதாக ஆகமங்கள் கூறுகின்றன.

பொதுவாக தாராலிங்கங்களை வழிபடுவதால், இறைவனின் பூரண அருள் கிட்டுவதுடன் சிவபதம் கிட்டும் என்றும் சொல்வர். எனவே இதை சாயுஜ்ய லிங்கம் என்றும் போற்றுவர்.

இந்தத் தாராலிங்கத்தின் மேல் தாராபாத்திரம் மூலமாக அபிஷேகம் செய்யும்போது, அபிஷேக நீர் தாரைகளின் வழியே பிரிந்து செல்லும் காட்சியை தரிசிப்பதால் பரம்பொருளின் முழுமையான அருளைப் பெற்று வளமுடன் வாழலாம் என்பர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## குருந்தூர்...

அதற்கு பௌத்தபிக்குமார்களும் பல வியாக்கியானங்களை வெளியிட்டிருந்தனர். குருந்தகம விகாரை என்றெல்லாம் கதை சொன்னதை நாம் பார்த்துக்கொண்டு இருந்தோம். ஆனால் உண்மைகள் ஒருகாலமும் உறங்குவதில்லை அவை தக்க சமயத்தில் வெளிக்கொணரப்படும் என்ற உண்மை மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இற்றைக்கு 2,400 வருட வரலாற்றினைக் கொண்ட பௌத்தம் யுகங்கள் தாண்டிய எம்மதச் சின்னங்களை உரிமை கொண்டாடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஆக எமது சின்னங்களை வழிபாட்டு சின்னங்களை உரிமை கூறுவதை இனியாவது நிறுத்திக்கொண்டால் அது அவர்களுக்கு அழகு.

இவர்களால் இலங்கையில் மட்டுமே வரலாறுகளை மாற்ற முடியும். உலகில் உள்ள வரலாறுகளை மாற்றமுடியாது. தற்போது குருந்தூரில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கமானது பல்லவர்காலத்திற்குரியது. அது தாரா லிங்கம் என அழைக்கப்படுகிறது.

ஈழத்தே சோழர் காலத்திற்கு முந்தியே பெரும் சிவவழிபாட்டு இடங்கள் இருந்துள்ளன.

எனவே ஈழம் முழுவதுமே சிவனேயச் செல்வர்கள் வாழ்ந்த பூமி என்பதனை இனியாவது ஏனைவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். உண்மை என்பது நீண்டகாலத்திற்கு மறைக்க முடியாதது என்று விளங்கிக் கொள்ளட்டும் - என்றார்.

## முல்லைத்தீவு...

இவ்வாறு சிங்கள நாளிதழான தினமின செய்தி வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் நடைபெற்ற அகழ்வு ஆராய்ச்சியில் கிடைத்த தொல்லியல் சிதைவுகளில் காணப்படும் சிவலிங்கத்தை ஒத்த உருவம் பல்லவர் கால எட்டுப்பட்டை ( எட்டு முகம்) தாரா லிங்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் விகாரை இருந்தமைக்கான தொல்லியல் சான்று ஆதாரங்கள் உள்ளதாகத் தெரிவித்து அரசினால் ஆராய்ச்சிப் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

அங்கு ஆதிலிங்கேஸ்வர ஐயனார் ஆலயம் இருந்தது என்று தமிழ் மக்கள் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அங்கு அமைக்கப்பட்ட இந்துகளால் வழிபட்டு வந்த சூலத்தை காணவில்லை என்றும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் தற்போது நடைபெற்று வரும் அகழ்வு ஆராய்ச்சியில் சிவலிங்கத்தை ஒத்த கல்லு மீட்கப்பட்டதாக சிங்கள ஊடகம் ஒளிப்படத்துடன் செய்தி வெளியிடப்பட்டது.

அந்த உருவம் பல்லவர் கால எட்டுப்பட்டை ( எட்டு முகம்) தாரா லிங்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல்லவர் காலத்தை சார்ந்த அபூர்வமான தாரா லிங்கம் என்பது பாணப் பகுதியில் பட்டைகளோடு காட்சி தரும் லிங்கங்கள் ஆகும். அப்படிப்பட்ட லிங்கங்கள் அனைத்து ஆலயங்களிலும் இருக்காது. தாரா லிங்கங்களில் எட்டு பட்டை, பதினாறு பட்டை மற்றும் பன்னிரண்டு பட்டைகளைக் கொண்ட தாரா லிங்கத்தை வணங்கி வந்தால் பல செல்வங்களும் பெற்று பெரு வாழ்வு வாழலாம் என்பது நம்பிக்கை ஆகும்.

இது போன்ற மேலும் சில அபூர்வமான தாரா லிங்கங்கள் இலங்கையிலும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் காணப்படுகின்றன என்பது ஆச்சர்யமாகவே உள்ளது.

## வடக்கில்...

உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலை கோரோனா கொத்தணியுடன் தொடர்புடைய 8 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவி ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைத் துறை மாணவி ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் பதுளையிலிருந்து வருகை தந்து கல்விபயின்றவர்.

அத்துடன், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் கொழும்பிலிருந்து வருகை தந்த நிலையில் தானாக முன்வந்து பிசிஆர் மாதிரிகளை வழங்கியவர்.

மன்னார் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 5 பேர் ஹற்றன் நஷனல் வங்கியின் நானாட்டான் கிளை உத்தியோகத்தர்கள்.

அந்த வங்கிக் கிளை உத்தியோகத்தர்களிடம் பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்ட நிலையில் கிளை அலுவலகம் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

அத்துடன் நானாட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மூவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்புடையோர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டு பேர் மன்னார் நகர் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.அவர்கள் இருவரும் கோரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் வைத்திய சாலைக்கு சிகிச்சை சென்ற நிலையில் மாதிரிகள் பெறப்பட்டன” என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூறினார்.

## மக்கள் எழுச்சியே...

2009 க்கு பிறகு தாமாக கிளர்ந்தெழுந்த போராட்டத்திற்கு தனிநபர்களோ கட்சிகளோ நாமோ உரிமை கோர முடியாது.

ஆனாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு எமக்கு பலம் சேர்த்தது. குறிப்பாக சாணக்கியனின் துணிச்சலை மெச்சுகின்றோமென தெரிவித்துள்ளார் வேலன் சுவாமிகள்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் வேலன் சுவாமிகள் மற்றும் வணபிதா லியோ அடிகளார் கருத்துக்களை வெளியிட்டதுடன் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்க அங்குரார்ப்பணத்தையும் அறிவித்துள்ளனர்.

# கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 370ஆக அதிகரிப்பு



இலங்கையில் மேலும் 5 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கபுலியத்த பகுதியைச் சேர்ந்த 45 வயதான பெண் ஒருவர் தெல்தெனிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கொவிட் 19 நிமோனியா நிலை, நுரையீரல் அழற்சி நோய் என்பன அவரது மரணத்திற்கான காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மொரட்டுவை பகுதியைச் சேர்ந்த 81 வயதுடைய ஆண் ஒருவர், கொத்தலாவலை பாதுகாப்பு வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொவிட்19 நிமோனியாவினால் சிறு நீரகம் செயலிழந்தமை மற்றும் குருதி விசமானமை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெடவளை பகுதியை சேர்ந்த 56 வயதான ஆண் ஒருவருக்கு கண்டி பொது வைத்தியசாலையில் கொவிட் 19 இருப்பது கண்டறியப்பட்டது.

பின்னர் அவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தார்.

கொவிட் 19 நிமோனியா நிலையே அவரது மரணத்திற்கான காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் பகுதியை சேர்ந்த 73 வயதான ஆண் ஒருவர் நாரம்மல மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கொவிட் 19 நிமோனியா நிலைமை மற்றும் மூச்சிழுப்பு என்பன அவரது மரணத்திற்கான காரணம் என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய பெண் ஒருவர் கடந்த 6ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்தார்.

கொவிட் 19 நிமோனியா, மோசமடைந்த நீரிழிவு மற்றும் உயர் குருதி அழுத்தம் என்பன அவரது மரணத்திற்கான காரணம் ன தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 370 ஆக உயர்வடைந்துள்ளன.

# கல்முனை மாநகர சபையை கலைக்கக் கோரிக்கை




கல்முனை மாநகர சபையினை உடனடியாக கலைக்க வேண்டும் என ஆளுநரிடம் வேண்டுகோள் விடுப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்துள்ளார்.

கல்முனை ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை(9) இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

கல்முனை மாநகர சபையின் 12 வட்டாரமான பெரிய பகுதியில் மின்குமிழை கொள்வனவு செய்தும் அதனை பொருத்த முடியாமல் இருப்பதாகவும் கல்முனை வாழ் இளைஞர்கள் அதனை பொருத்துவதற்கு முன்வருமாறு எனது சக உறுப்பினர் கந்தசாமி சிவலிங்கம் கேட்டுள்ளார்.இதற்கு காரணம் பாதீடு தொடர்பில் எம்மால் வாக்களிக்கப்பட்டமை ஆகும்.உண்மையில் இந்த பாதீட்டிற்கு எதிராக வாக்களித்தமைக்கு முக்கிய காரணம் முதல்வருடன் கொண்ட தனிப்பட்ட குரோதமோ வெறுப்புக்களோ அல்ல. இந்த வாக்களிப்பின் போது எமது இளைஞர்கள் பொது மக்கள் விடுத்த நியாயமான கோரிக்கைகளை ஏற்று தான் பாதீட்டிற்கு எதிராக எமது நியாயமான குறைபாடுகள் வேண்டுகோள்களை கூறி வாக்களித்தோம். தற்போது இவ்விடயங்களை முதல்வர் வைத்துக்கொண்டு எமது பகுதிகளில் இடம்பெறும் திண்மக் கழிவுகள் தொடர்பான பிரச்சினை மற்றும் மின்விளக்குகள் ஒளிராமை தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு எவ்வித பதிலும் கிடைப்பதில்லை.சபையில் குறைகளை சுட்டிகாட்டி கதைக்கின்ற போது பிழையானவர்களாக எம்மை அடையாளப்படுத்துகின்றனர்.இவ்வாறாக மாநகர சபை இயங்குவதனால் எந்தவித பிரயோசனமும் இல்லை.எனவே இந்த மாநகர சபையை கலைக்குமாறு ஆளுநர் ஜனாதிபதியை கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு இப்பாரபட்சம் தொடருமாயின் இனரீதியான பிரச்சினை தொடர வாய்ப்பாகும்.அத்துடன் ஹரீஸ் எம்.பியின் அஜன்டாவில் இயங்கும் முதல்வரின் தன்னிச்சையான போக்குகள் நிறுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

# மின்குமிழை வாங்கியும் பொருத்த முடியவில்லை

மின்குமிழை கொள்வனவு செய்தும் அதனை பொருத்த முடியாமல் இருப்பதாகவும் கல்முனை வாழ் இளைஞர்கள் அதனை பொருத்துவதற்கு முன்வருமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் கந்தசாமி சிவலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்முனை ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (9) இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

எமது கல்முனை மாநகர சபையின் 33 ஆவது அமர்வின் போது பாதீடு தொடர்பில் எம்மால் வாக்களிக்கப்பட்டது. உண்மையில் இந்த பாதீட்டிற்கு எதிராக வாக்களித்தமைக்கு முக்கிய காரணம் முதல்வருடன் கொண்ட தனிப்பட்ட குரோதமோ வெறுப்புக்களோ அல்ல. இந்த வாக்களிப்பின் போது எமது இளைஞர்கள் பொதுமக்கள் விடுத்த நியாயமான கோரிக்கைகளை ஏற்று தான் பாதீட்டிற்கு எதிராக எமது நியாயமான குறைபாடுகள் வேண்டுகோள்களை கூறி வாக்களித்தோம்.அந்த வகையில் ஒவ்வொரு மாநகர சபையின் அமர்வின் போதும் தன்னிச்சையாக சட்டங்கள் கட்டளைச்சட்டங்களை கூறி முதல்வர் நடந்து கொள்கின்றார். இதனை கருத்தில் கொண்டும் முதல்வருக்கு எதிராக நாம் வாக்களித்திருந்தோம். இவ்வாறான விடயங்களை வைத்துக்கொண்டு எமது பகுதிகளில் இடம்பெறும் திண்மக்கழிவுகள் தொடர்பான பிரச்சினை மற்றும் மின்விளக்குகள் ஒளிராமை தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு எவ்வித பதிலும் கிடைப்பதில்லை.சபையில் குறைகளை சுட்டிக்காட்டி கதைக்கின்ற போது பிழையானவர்களாக எம்மை அடையாளப்படுத்துகின்றனர்.

எமது கல்முனை 12 வட்டாரமானது அதிக மக்களை கொண்ட ஒரு பிரதேசமாகும். இப்பகுதி மக்கள் என்னை அதிகமாக வாக்களித்து சபைக்கு உறுப்பினராக தெரிவு செய்து அனுப்பியுள்ளனர். இவ்வாறு இருந்த போதிலும் எனது சொந்த நிதியில் தற்போது மின்குமிழை கொள்வனவு செய்து அதனை பொருத்த முடியாமல் அலைக்கழிக்கப்பட்டுள்ளேன்.முதல்வரை சந்தித்து கலந்துரையாடிய போது பல்வேறு காரணங்களை கூறி தட்டிக்களிக்கின்றார்.எனவே கல்முனை வாழ் பொதுமக்கள் இளைஞர்களிடம் இவ்விடயத்தை தெரியப்படுத்த விரும்புகின்றேன் என்றார்.

# பதுளை மாநகர சபையின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

பதுளை மாநகர சபையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முசம்மில் அறிவித்துள்ளார்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முசம்மில் கையெழுத்திட்ட சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு மூலம் இந்த நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாநகர சபையின் அதிகாரங்கள் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பதுளை மாநகர சபையின் விசேட ஆணையாளராக எச். எம். ஜீவந்த ஹேரத் இன்று (புதன்கிழமை) முதல் உடன் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் மாநகர சபை சட்டங்களின் அடிப்படையில், மாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டு. பொலிஸாருக்கு தடுப்பூசி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிசாருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் ஆரம்ப நடவடிக்கை நேற்று (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பணிப்பாளர் வைத்தியர் கிரிசுதன் தலைமையில் இடம்பெற்றது.

பாதுகாப்பு படையினருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் மாவட்டதிலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் சுமார் 300 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிஸாருக்கு இந்த தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் முதற்கட்டமாக மட்டக்களப்பு தலைமைய பொலிஸ் நிலையம், ஆயித்தியமலை பொலிஸ் நிலையம், ஆகிய 60 பொலிஸாருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன் ஏனைய பொலிஸாருக்கும் ஏதடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறும் என சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

# ஒரேநாளில் அதிகூடிய கொரோனா நோயாளர்கள் பதிவு

## மொத்த எண்ணிக்கை 71 ஆயிரத்தைக் கடந்தது

நாட்டில் ஒரே நாளில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்றைய தினம் மொத்தமாக 976 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 971 பேர் பெலியகொட - மினுவாங்கொட கொவிட் கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என்றும் ஏனைய நான்கு பேர் நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், குவைத்திலிருந்து வருகை தந்த ஒருவரும் கொரோனா தொற்றுக்குள்ளானமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பேலியகொட - மினுவாங்கொட கொவிட் கொத்தணிப் பரவலில் சிக்கிய நோயாளர்களது எண்ணிக்கை 67 ஆயிரத்து 196 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் பதிவான மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையானது 71 ஆயிரத்து 211 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை கொரோனா தொற்றுக்குள்ளான 912 நோயாளர்கள் பூரண குணமடைந்து நேற்றைய தினம் வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொவிட் தொற்றுக்குள்ளாகி பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் 65 ஆயிரத்து 53 ஆக அதிகரித்துள்ளது.

தற்சமயம் 694 பேர் சந்தேகத்தின் பேரில் தொடர்ந்தும் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளதுடன், 5 ஆயிரத்து 788 நோயாளர்கள் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை கொவிட் தொற்றினால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 370 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் சி. பி ரத்நாயக்கவுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது!

வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி. பி. ரத்நாயக்கவுக்கு இன்று (புதன்கிழமை) கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இராணுவ வைத்தியசாலையில் அவர் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று உறுதியான இருவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணிய நிலையில் சி. பி. ரத்நாயக்க, கடந்த சில மாதங்களில் இரண்டு சந்தர்ப்பங்களில் தனிமைப்படுத்தப்பட்டார்.

இதனை அடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.